## 12.1 1997–98ம் ஆண்டிற்கான பத்தாவது நிதிக் குழு மான்ய ஒதுக்கீடுகள் – 246 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.885.60 இலட்சத்தில் புதிய ஈப்பு வாங்குதல்

ஊரக வளர்ச்சித்துறை

அரசாணை (நிலை) எண்.167 நாள் : 28.5.1997

பார்வை :

அரசு ஆணை (நிலை) எண்.227, ஊரக வளர்ச்சி(சி2)துறை,

நாள் 15.10.1996.

**ஆணை**

பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மான்யம் அளிப்பதற்காக மைய அரசு மாநில அரசிற்கு 1996–97ம் ஆண்டிலிருந்து நான்காண்டுகளுக்கு இடைக்கால மான்யமாக (Adhoc grant) தொகை ஒதுக்கீடு செய்கிறது. 1997–98ம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.71.83 கோடி ஆகும்.

2. 1996–97ம் ஆண்டில் இதே அளவு தொகையான ரூ.71.83 கோடியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு 15.10.96 நாளிட்ட ஊரக வளர்ச்சித்துறை அரசாணை எண்.227ன் படி பிரித்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3. 1997–98ம் ஆண்டிற்கு பத்தாவது நிதிக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மான்யத் தொகையான ரூ.71.83 கோடியை பின்வருமாறு ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| மாவட்ட ஊராட்சிகள் | .... | 14.00 கோடி |
| ஊராட்சி ஒன்றியங்கள் | .... | 38.40 கோடி<br>00.30 |
| ஊராட்சிகள் | .... | 19.13 கோடி |
| **மொத்தம்** | .... | **71.53 கோடி** |

மேற்கூறிய ஒதுக்கீட்டில் மாவட்ட ஊராட்சி ஒன்றுக்கு ரூ.50 லட்சமும், ஊராட்சி ஒன்றியம் ஒன்றுக்கு ரூ.10 லட்சம் வீதம் வழங்கி அரசு ஆணையிடுகிறது. தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதியில் உள்ள நீர்த்தநல்லூர் கால்நடை சந்தையில் அடிப்படை பணிகள் மேம்பாட்டிற்காக ரூ.30 லட்சம் நிதி கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கப்படுகிறது. ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.19.13 கோடியை ஊராட்சிகளின் மக்கள் தொகை (Population) மற்றும் தனி நபர் மான்யம் (per capita grant) ஆகியவற்றை 50 : 50 என்ற கணக்கில் ஊரக வளர்ச்சி இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட பின்னர் அவராலேயே அத்தொகை பிரித்து அளிக்கப்பட வேண்டும். இவ்வொதுக்கீடு முறை நடப்பாண்டிற்கு (1997–98) மட்டும் உரிய இடைக்கால ஒதுக்கீடாகும். மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட மேற்கூறிய மான்யங்களை ஊரக வளர்ச்சி இயக்குநர் பெற்று பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு புது ஈப்பு வாங்கும் திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் 27.3.97 அன்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. இதன்படி 384 ஈப்புகள் வாங்கப்படவேண்டும். இவ்விதமாக வாங்கப்படும் ஈப்புகள் ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படும் பல்வேறு பணிகளை கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் பயன்படுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஈப்பு வாங்குவதற்கும் தோராயமாக ரூ.3.60 இலட்சம் தேவைப்படும். இந்த செலவினத்தில் ஒரு பங்கு பத்தாவது நிதிக்குழு மானியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம் என்ற கருத்திற்கிணங்க, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் மானியத்திலிருந்து இவைகளை வாங்கிக் கொள்ளலாமென கருதப்படுகிறது. எனினும் 384 ஊராட்சி ஒன்றியங்களில் மாநில நிதிக்குழு (State Finance Commission) ஒதுக்கீட்டினை பரிசீலிக்கும் பொழுது இணைப்பில் கண்டுள்ள 138 ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஆதாயம் குறைவாக இருப்பதாகவே கருதப்படுகிறது. ஆகையால் இந்த 138 ஒன்றியங்களுக்கு மட்டும் ஈப்பு வாங்குவதற்கான செலவை அரசு நிதியிலிருந்து செலவிட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்திரவு மற்றும் நிதி ஒதுக்கீடு அரசு ஆணை எண்.150, ஊரக வளர்ச்சித்துறை நாள் 8.5.97–ல் வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 246 ஊராட்சி ஒன்றியங்கள் மேலே பத்தி 3–ல் ஒதுக்கப்பட்ட மான்யத்

தொகையிலிருந்து ஒரு ஈப்பு வீதம் வாங்கிக் கொள்ளலாம். எஞ்சியிருக்கும் தொகையினை அரசு ஆணை எண்.227, ஊரக வளர்ச்சி (சி2) துறை, நாள் 15.10.96–ல் உள்ள பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள முதலீட்டு பணிகளுக்காக உபயோகிக்கப்பட வேண்டும். மற்ற ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் மேலே கண்டுள்ள அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள முதலீட்டு பணிகளுக்கு இந்த முழு மானியத்தையும் உபயோகிக்கப்பட வேண்டும்.

5. ஈப்பு வாங்க அனுமதிக்கப்பட்ட 246 (இணைப்பில் இல்லாத) ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் ஈப்புக்கான விலை தொகை போக மீதித் தொகையை பெற்று அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட வேண்டும். 246 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஈப்பு வாங்க அனுமதிக்கப்பட்ட மொத்த தொகையான ரூ.885.60 (246 x 3.60) லட்சத்தை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களால் பெற்று அரசு ஆணை எண்.150, ஊரக வளர்ச்சி (தி4) துறை, நாள் 8.5.97 பத்தி 11–ல் ஆணையிடப்பட்டபடி ஈப்பு வாங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6. இச்செலவினம் கீழ்க்கண்ட தலைப்பிற்கு பற்று வைக்கப்பட வேண்டும்.

"3604.உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடும் ஒதுக்கீடுகளும் – எட்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்– II மாநிலத் திட்டம் –JA பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஊரக வளர்ச்சித்துறை அரசு செயலரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் – 09. உதவி மானியங்கள், (D.P. Code 3604.00 200 JA 0903)

7. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.138.இ.செ.(LSR)/97, நாள் 26.5.1997.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்

**இணைப்பு**

| மாவட்டம் | | ஊராட்சி ஒன்றியங்கள் | |
|---|---|---|---|
| 1. | வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் | 1. | ஜோலார்பேட்டை |
| | | 2. | நாட்ராம்பள்ளி |
| | | 3. | வாலாஜாபேட்டை |
| | | 4. | சோளிங்கர் |
| | | 5. | கனியம்பாடி |
| | | 6. | கந்திலி |
| | | 7. | காட்பாடி |
| 2. | திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் | 8. | சேத்துப்பட்டு |
| | | 9. | மேற்கு ஆரணி |
| | | 10. | போளூர் |
| 3. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் | 11. | மேல் மலையனூர் |
| 4. | தஞ்சாவூர் மாவட்டம் | 12. | சேதுபாவாசத்திரம் |
| | | 13. | மதுக்கூர் |
| | | 14. | பேராவூரணி |
| | | 15. | ஒரத்தநாடு |
| | | 16. | பட்டுக்கோட்டை |
| 5. | புதுக்கோட்டை மாவட்டம் | 17. | அறந்தாங்கி |
| | | 18. | மணமேல்குடி |
| | | 19. | குன்னன்டார்கோவில் |
| | | 20. | திருவரங்குளம் |
| | | 21. | பொன்னமராவதி |
| | | 22. | விராலிமலை |
| | | 23. | அரிமளம் |
| | | 24. | ஆவுடையார்கோவில் |
| 6. | திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் | 25. | மணிகண்டம் |
| | | 26. | மனப்பாறை |
| | | 27. | மன்னச்சநல்லூர் |
| | | 28. | வையம்பட்டி |
| | | 29. | தாத்தையங்கார்பேட்டை |
| | | 30. | புள்ளம்பாடி |
| 7. | பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் | 31. | திருமானூர் |
| 8. | தீரன் சின்னமலை கரூர் மாவட்டம் | 32. | கடவூர் |

## 12. CENTRAL FINANCE COMMISSIONS

| | | | |
|---|---|---|---|
| 9. | திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம் | 33. | நத்தம் |
| | | 34. | வேடசந்தூர் |
| | | 35. | செட்டியார் சத்திரம் |
| | | 36. | ஒட்டன்சத்திரம் |
| | | 37. | வடமதுரை |
| | | 38. | சானார்பட்டி |
| | | 39. | கொடைக்கானல் |
| 10. | வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம் | 40. | கம்பம் |
| | | 41. | உத்தமபாளையம் |
| | | 42. | போடிநாயக்கனூர் |
| 11. | மதுரை மாவட்டம் | 43. | கொட்டாம்பட்டி |
| | | 44. | கள்ளிகுடி |
| | | 45. | திருப்பரங்குன்றம் |
| | | 46. | உசிலம்பட்டி |
| | | 47. | செல்லம்பட்டி |
| | | 48. | மேலூர் |
| 12. | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் | 49. | கீழப்பாவூர் |
| | | 50. | வள்ளியூர் |
| | | 51. | ராதாபுரம் |
| | | 52. | களக்காடு |
| | | 53. | ஆலங்குளம் |
| | | 54. | மேலநீலிதநல்லூர் |
| | | 55. | கடையம் |
| | | 56. | பாப்பாக்குடி |
| | | 57. | நாங்குநேரி |
| | | 58. | அம்பாசமுத்திரம் |
| | | 59. | சேரன்மகாதேவி |
| | | 60. | தென்காசி |
| | | 61. | செங்கோட்டை |
| 13. | கன்னியாகுமரி மாவட்டம் | 62. | கிள்ளியூர் |
| | | 63. | மூஞ்சிறை |
| | | 64. | குருந்தன்கோடு |
| | | 65. | தக்கலை |
| | | 66. | திருவட்டாறு |

| | | | |
|---|---|---|---|
| | | 67. | மேல்புரம் |
| | | 68. | ராஜாக்காமங்கலம் |
| | | 69. | அகஸ்தீஸ்வரம் |
| 14. | சிதம்பரனார் மாவட்டம் | 70. | சாத்தான்குளம் |
| | | 71. | உடன்குடி |
| | | 72. | ஆழ்வார்திருநகரி |
| | | 73. | புதூர் |
| | | 74. | தூத்துக்குடி |
| | | 75. | திருச்செந்தூர் |
| 15. | இராமநாதபுரம் மாவட்டம் | 76. | மண்டபம் |
| | | 77. | கடலாடி |
| | | 78.<br>79. | திருவாடாணை<br>நைனார்கோவில் |
| | | 80. | போகலூர் |
| 16. | பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டம் | 81. | சிங்கம்புனரி |
| | | 82. | சிவகங்கை |
| | | 83. | திருப்பத்தூர் |
| | | 84. | கல்லல் |
| | | 85. | சாக்கோட்டை |
| | | 86. | எஸ்.புதூர் |
| | | 87. | காளையார்கோயில் |
| | | 88. | தேவகோட்டை |
| | | 89. | கன்னங்குடி |
| 17. | காமராஜர் மாவட்டம் | 90. | அருப்புக்கோட்டை |
| | | 91. | திருச்சூலி |
| | | 92. | வெம்பங்கோட்டை |
| | | 93. | சிவகாசி |
| 18. | சேலம் மாவட்டம் | 94. | தாரமங்கலம் |
| | | 95. | நங்கவள்ளி |
| | | 96. | இடப்பாடி |
| | | 97. | மெக்டோனால்டு சத்திரம் |
| | | 98. | கொங்கனாபுரம் |
| | | 99. | வீரபாண்டி |
| | | 100. | சேலம் |

| | | | |
|---|---|---|---|
| | | 101. | மேச்சேரி |
| 19. | ராஜாஜி மாட்டம் | 102. | பள்ளிபாளையம் |
| | | 103. | மோகனூர் |
| | | 104. | கபிலர்மலை |
| | | 105. | பரமத்தி |
| | | 106. | மல்லசமுத்திரம் |
| | | 107. | சேந்தமங்கலம் |
| 20. | தர்மபுரி மாவட்டம் | 108. | காவேரிபட்டினம் |
| | | 109. | பாலக்காடு |
| | | 110. | நல்லாம்பள்ளி |
| | | 111. | தர்மபுரி |
| | | 112. | காரிமங்கலம் |
| | | 113. | வேப்பனபள்ளி |
| | | 114. | பென்னாகரம் |
| | | 115. | சூளகிரி |
| | | 116. | பர்கூர் |
| | | 117. | கிருஷ்ணகிரி |
| | | 118. | மாத்தூர் |
| | | 119. | கேலமங்கலம் |
| | | 120. | தளி |
| 21. | பெரியார் மாவட்டம் | 121. | சென்னிமலை |
| | | 122. | பவானி |
| | | 123. | பெருந்துறை |
| | | 124. | மொடக்குறிச்சி |
| | | 125. | நம்பியூர் |
| | | 126. | ஈரோடு |
| | | 127. | வெள்ளக்கோவில் |
| | | 128. | |
| | | 129. | |
| | | 130. | |
| 22. | கோயம்புத்தூர் மாவட்டம் | 131. | சர்க்கார்சாமக்குளம் |
| | | 132. | திருப்பூர் |
| | | 133. | சூளூர் |
| | | 134. | தொண்டாமுத்தூர் |
| | | 135. | மடத்துக்குளம் |
| | | 136. | மதுக்கரை |
| 23. | நீலகிரி மாவட்டம் | 137. | கூடலூர் |
| | | 138. | குன்னூர் |